

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில், நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்தாலோசனை மேற்கொண்டனர். இதில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர்.சேகர், சேதுநாதன், மாசிலாமணி, செஞ்சி சிவா, ஆர்.விஜயக்குமார், எல்.பி. நெடுஞ்செழியன், எம்.விஜயராகவன், பி.கே.பச்சையப்பன், திருமதி.சாந்தி சுப்பிரமணி, நாராயணமூர்த்தி, மொக்தியார் அலிமஸ்தான், எஸ். கார்த்திக், அனந்தபுரம் ஏ.சம்பத், ஏவிஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், க.சந்திரன், து.சந்திரன், நா.விஜயபாஸ்கர், ஜி.ரிஸ்வான், தி.சதீஷ், கு. விவேகானந்தன், எஸ்.ஷாகித் பாஷா, ந.ராகுல்ராம் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சியில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ் ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, எஸ்.லூயிஸ், கு.தீனதயாளன் , நகர செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில்

# இந்திய ரிசர்வ் வங்கிகளின் பங்களிப்பு அதிகரித்துள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி?

புதுடெல்லி, பிப்.16-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் மாநிலங்களவையில், நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதிகள் அதிகரித்துள்ளதா? என்றும், வங்கிகளின் மேலாண்மை, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் அனைத்து தரப்பினருக்குமான வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாக்கும் இந்திய ரிசர்வ் வங்கி கவனம் செலுத்துமா? என்றும், புதிய அனுமதிகள் வழங்க



ஒன்றிய அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளதா? என்றும், அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியினை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த ஜனவரி 2026 முதல் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி வழங்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது என்றும், குறைந்த பட்சம் முதலீடாக ரூபாய் 300 கோடிகள் அளவிற்கு உள்ள நகர கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும் பல்வேறுப்பட்ட பயனாளிகளை கொண்டு அந்த வங்கிகள் இயங்கும் என்றும், நகர்ப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் அனைவரையும் உள்ளடக்கியதாக கூட்டுறவு வங்கிகள் செயல்பட வேண்டும் எனவும் இணையமைச்சர் தெரிவித்தார்.

நகரக் கூட்டுறவு வங்கியின் பங்குப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் குறைந்த பட்ச இருப்புக் காலம் பத்து ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், முதலீட்டாளர்களை நலனைப் பாதுகாக்க, ஒழுங்காற்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், புவியியல் ரிதியாக நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள் மட்டுமே பங்குதாரர்களாக சேர்க்கப்படும் என்றும், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, நான்காம் நிலை நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முதலீட்டு விகிதம் 12 சதவீதமாக உயர்த்துப்பட்டுள்ளது.

முதல் நிலையிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு கையிருப்பு முதலீட்டு விகிதம் 55 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் மூலம், வங்கித் துறையின் வளர்ச்சி கூட்டுறவுத்துறையில் அதிகரிக்க வாய்ப்புகள் உறுவாக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் பதிலை அளித்துள்ளார்.

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### ஆதிதிராவிடர்நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 17-02-2026 செவ்வாய்க்கிழமை, நண்பகல் 12.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.
2. 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தல் – குறித்து

**ஆ. கிருஷ்ணசாமி**, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை – 18
நாள்– 14.02.2026

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. காளியப்பன்

**பிப்ரவரி 16 (2008)**



தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான

# சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான கடன் வசதி திட்டங்கள் செயல்படுத்தப்படுமா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, பிப்.16-

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜேகத்ரட்சகன் அவர்கள் 12.2.26 அன்று மக்களவையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான, கடன் வசதி திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முனைந்துள்ளதா? என்றும் கழிவு நீர் அமைப்புகளை கையாள தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறதா? என்றும் தூய்மைப்பணியாளர்களின் மறுவாழ்வு சட்டம் 2013ன்படி முறையான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்றும் இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா? என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை இணையமைச்சர் மோகன் சாகு அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில்:

சுகாதாரம் மாநிலப் பட்டியலில் இருந்த போதிலும், கழிவு நீர் அமைப்புகளின் மேலாண்மையில், இயந்திரங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும் என உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை நகர்ப்புற வளர்ச்சி துறை அவ்வப்போது அளித்து வருகிறது என்றும், தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்புகென சபாய் மித்ரா என்ற திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகப் படுத்தியுள்ளது என்றும், இதுவரை 3429 உள்ளாட்சி அமைப்புகள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் உதவியுடன் சுகாதாரப் பணியாளர்களுக்கென நமஸ்தே என்ற திட்;டத்தின் மூலம், சுவச்சதா உதயாமி என்ற திட்டத்தின் மூலமும் இது வரை 16 மாநிலங்களுக்கு 496 தொகுதிகளுக்கென ரூபாய் 42 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும் தமிழகத்திற்தென ரூபாய் 159 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என்றும் 302 இயந்திரங்கள் வாங்குவதற்கு 43 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மோகன் சாகு அவர்கள் பதில் அளித்துள்ளார்.

### "உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா?"

# "கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, பிப். 16 –

டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்களவை ஓட்டத்துடன் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினர் கேஆர்.என்.இராஜேஸ்குமார், இந்திய "கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா? என மாநிலங்களவையில் ஒன்றிய அரசை கடுமையாக கேள்வி எழுப்பினார்.

நேரமில்லா நேர கேள்வி நேரத்தில், "கப்பல் கட்டுமானத்திற்கு தேவையான கடல்தர எஃகு, இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் உள்ளிட்ட கூறுகளில் இந்தியா எவ்வளவு அளவு இறக்குமதிகளை சார்ந்துள்ளது? கடந்த ஐந்து ஆண்டுகளில் அதன் அளவு மற்றும் மதிப்பு என்ன? இந்திய "கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா??

இந்த கூறுகளின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த துறைமு கங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால்,, இந்தியாவின் கப்பல் கட்டுமானத் துறையில் பயன்படுத்தப்படும் கூறுகளுக்கான இறக்குமதி சார்பு குறித்து இந்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது.

சில கப்பல் கட்டுமான கூறுகளுக்கான தேவைகளை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தற்போது பூர்த்தி செய்து வருகின்றனர்.

ஆனால், கடல் இயந்திரங்கள் (Marine Engines), இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் (Navigation Equipment) போன்ற சில முக்கிய கூறுகளுக் காக இந்தியா இன்னும் இறக்குமதிகளை சார்ந்துள்ளது.

இது தொடர்பாக, கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (Cochin Shipyard Limited – CSL) மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் (2021 முதல் 2025 வரை) மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளின் அளவு மற்றும் மதிப்பு விவரங்கள் அனெக்சர் – I ல் இணைக்கப்பட்டுள்ளது. . கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (SB FAS), மேலும், கப்பல் கட்டுமானத் துறையில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் கப்பல் கட்டுமான கூறுகளின் கொள்முதலை ஊக்குவிக்கும் நோக்கில், கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (Shipbuilding Financial Assistance Scheme – SBFAS) அமல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ்:

40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு முழு நிதி உதவி வழங்கப்படும்.30 சதவீதம் முதல் 40 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு விகிதாசார அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும். 30 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் எந்த நிதி உதவியும் வழங்கப்படாது.



கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (CSL) – கடந்த 5 ஆண்டுகளின் இறக்குமதி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள் மூலம், உள்நாட்டு கப்பல் கட்டுமானத் துறையை வலுப்படுத்தவும், உள்நாட்டு கூறுகளின் பயன்பாட்டை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி மேற்கு ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள் ஊராட்சியில் முதலமைச்சர் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட பொங்கலை முன்னிட்டு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றியபெருந்தலைவர், விஜயகுமார், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன்,மாவட்ட பிரதிநிதிகள் கதிரவன், அய்யாதுரை உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் கிழக்கு நகரம், 4 வது வார்டு, காகுப்பம் பகுதியில், மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், நகர கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.